[1990 ஏப்ரல் 21

திரு. டி. கே. பழனிச்சாமி: அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மேலும் ஏழை எளிய பாட்டாளி மக்கள் கலைஞர் அரசால் காப்பாற்றப்படவேண்டும் என்ற நல்ல எண்ணத்தைக் கொண்ட உழைக்கின்ற வர்க்கத்தைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் உன்னிப்பாக கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

(ஆ) ஆதி திராவிடர் நலத்துறைப் பள்ளிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளது குறித்து.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வரும் ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட மாட்டார்கள் என்ற உறுதிமொழியை மீறி, ஆதிதிராவிடர் நலத்துறைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப் பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

ஒப்பந்த அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்யும் முறை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் நடைமுறையில் இருந்து வருகிறது. இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் 1986 முதல், கல்வியாண்டில் கடைசி தேதியில் பணி நீக்கம் செய்யப்பட்டு, விடுமுறை காலத்திற்குப் பின் மீண்டும் பணியிலமர்த்தப்படுகின்றனர். 181 பட்டதாரி ஆசிரியர்கள் இத்துறையில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேற்படி ஆசிரியர்கள் கல்வித்துறையில் அரசு ''ஆசிரியர் நியமனக்குழு'' அமைத்துள்ளது என்றும், கல்வித்துறையில் உள்ள இவர்களைப் போன்ற ஆசிரியர்களின் பணி, வரன்முறைப்படுத்தப்படுகிறது என்றும், எனவே, தங்கள் பணியும் பணியிலமர்த்தப்பட்ட முதல் தேதியிலிருந்து வரன்முறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் கோரி வருகின்றனர். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் உள்ள பட்டதாரி ஆசிரியர்களின் பணியிடம் தேர்வாணையத்தின் ஆளுகையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. எனவே, தேர்வாணையம் தேவையான பணியாளர்களைத் தெரிவு செய்து இத்துறைக்கு அனுப்ப வேண்டும். தற்போது 1989-90 கல்வியாண்டு முடிவடையும் தருவாயில் உள்ளதால், இத்துறையில் ஒப்பந்த அடிப்படையில் பணியி

லமர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் தங்களது பணி வரன் முறைப்படுத்தப்பட வேண்டும் என்று கோரி வருவதால், ஒன்று இவர்களது பணியினை வரன்முறைப்படுத்த வேண்டும் அல்லது இவர்களை கல்வியாண்டின் கடைசி தேதியில் பணி நீக்கம் செய்ய வேண்டும். எனினும், 28—7—1987 நாளிட்ட அரசு சமூக நலத் துறையின் கடித எண். 95815/ஆதிந/7/87 இல் வெளியிடப்பட்ட ஆணையின்படி, ஒப்பந்த அடிப்படையில் பணியிலமர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் நியமனம் தற்காலிக அடிப்படையி லானது. எனவே, அவர்கள் கல்வியாண்டின் கடைசி தேதியில் பணி நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது. ஒப்பந்த அடிப்படை யில் பணியிலமர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் பணி வரன் முறைப்படுத்துவது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவில்லை யாதலால் அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் அறிவித்துள்ள குறிப்பின் அடிப்படையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் ஒப்பந்த அடிப்படையில் பணியிலமர்த்தப்பட்ட 181 பட்டதாரி ஆசிரியர்களை பணி நீக்கம் செய்யாமல் அப்படியே வைத்துக்கொள்ள பரிந்துரை செய் துள்ளார். இப்பொருள் குறித்த செயற் குறிப்பு தனியே அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஆதி திரா விடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத ஆசிரியர்கள் மாண்புமிகு கல்வி அமைச்சரின் அறிவிப்புப்படி இந்த ஆண்டு பணி நீக்கம் செய்யப்படவில்லை. ஆனால், ஆதி திராவிடர் நலத்துறை பள்ளி களில் பணிபுரியும் இத்தகைய ஆசிரியர்களை மட்டும் பணி நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது என்ற குறிப்பு தரப்பட்டுள்ளது. இந்த பாரபட்சமான நடைமுறை மாற்றப்பட்டு அந்த ஆசிரியர் கள் பணி நீக்கம் செய்யப்படாமல் பணியில் நீடித்து வைக்கப் படுவார்களா? இந்த ஆண்டு பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தால் பணி தொடர்ச்சியோடு அவர்களுக்குப் பணி நீட்டிப்பு தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ; தலைவர் அவர் களே, இதுபற்றி அரசு தக்க நடவடிக்கை எடுத்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, கல்வித் துறையிலே இது போன்ற ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர் கள் பணி வரன்முறைப்படுத்தப்படுகிறார்கள். இதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தப் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தேர்வாணைக் குழு மூலம் தேர்வு செய்யப்பட்டு அனுப்பப்பட வேண்டும் என்று அவர்கள் விஷயத்திலே வலியுறுத்தப்படவில்லை என அறிகிறேன். எனவே, அதே போல ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்

களுக்கும் பாரபட்சம் இல்லாமல் பணி வரன்முறைப்படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் உத்திரவாதம் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று கல்வித்துறை அமைச்சருடைய கவனத்திற்கு அது கொண்டு வரப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுத்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9. சட்ட முன்வடிவு—(அறிமுகம் செய்தல்)

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, அறிமுக நிலையில் இந்தச் சட்டத் திருத்தத்தை எதிர்க்கிறோம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிக்க சபாநாயகர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இந்தச் சட்டத்தை மிக அழுத்தமாகவே எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' 1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.